Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** } **Case No. 59 of 2022**

Deposition of ....... witness for ................. { Prosecution........**P.W.2**
Defence
Court

| | |
|---|---|
| Name | **வள்ளி** |
| Husband's name | **பரமசிவம்** |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 2nd day of September 2024.**

(G.VIJAYAKUMAR) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 2nd day of September 2024.**

1 முதல் 6 எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

நான் பண்ருட்டி திருவதிகை கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சாந்தகுமார் என் இரண்டாவது மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 05.09.2020 சனிக்கிழமை அன்று மாலை எங்கள் ஊர் திருவதிகை மண்டபம் பஸ்ஸ்டாப்

அருகே என் சின்னமகன் கார்த்திக்குடன் என் பெரிய மகன் சாந்தகுமார் பேசிக்கொண்டிருந்தார். அப்போது ஞானவேலுடன் நாலைந்துபேர்கள் வந்து என் மகன் சாந்தகுமாரை ஞானவேல் என் அக்காவின் வாழ்க்கை உன்னால்தான் கெட்டது என்று கூறி ராடால் இத்தோடு ஒழிந்துபோடா என்று சொல்லி மண்டயில் அடித்தார். என் மூத்தார் மகன் சக்திவேல் எதிரி ஞானவேலின் தங்கையை காதலித்து திருமணம் செய்வதாக கூறி ஏமாற்றிவிட்டதாக அந்த பெண் சக்திவேல் மீது புகார் கொடுத்திருந்தார். சக்திவேலின் பெற்றோர் என் மகனிடம் தன் மகனை காப்பாற்றுமாறு கேட்டுகொண்டார்கள். என் மகன் சாந்தகுமார் இதுசம்மந்தமாக பேசினார். பின்னர் சக்திவேலை போலிசார் கைதுசெய்துவிட்டனர். என் மகன்தான் சக்திவேலை போலிஸ் ஸ்டேஷனில் பிணையில் எடுத்ததாக நினத்து என் மகனை தாக்கியுள்ளார்கள். நான் சம்பவத்தை பார்த்து ஊர்காரர்களை வரும்படி சத்தம் போட்டேன். ஆனாலும் எதிரிகள் என் மகனை சரமாரியாக தாக்கினார்கள். என் இன்னொரு மகன் கார்த்திக்கை கீழே தள்ளிவிட்டார்கள். ஆஜர் இரண்டாவது எதிரி என் மகனை நெஞ்சில் கத்தியால் குத்தினார். ஆஜர் 3 வது எதிரி என் மகனை விலாவில் கத்தியால் குத்தினார். ஆஜர் 4 வது எதிரி என் மகனை கத்தியால் குத்தியபோது அதில் என் மகனின் கையில் பட்டது. நீங்கள் கிட்டே வந்தால் உங்களையும் குத்திவிடுவேன் என்று அவர் மிரட்டினார். அன்றைய தினம் என் மகன் சாந்தகுமார் வெள்ளைகலர் பேண்டும், மஞ்சள் கலர் சட்டையும் அணிந்திருந்தார். என்னிடம் காட்டப்படும் இரும்பு பைப்பால்தான் 1வது எதிரி தாக்கினார். அது ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆடை என் மகன் அணிந்திருந்த வெள்ளைநிற பேண்ட் ஆகும். அது சா.பொ.4. காயம்பட்ட என் மகனை பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். அவர்கள் கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துபோக சொன்னார்கள். கடலூர் அரசு மருத்துவமனையில் என் மகனை

சேர்த்தோம். அங்கு சிகிச்சை அளித்தார்கள். என் மகன் சிகிச்சை பலனின்றி அன்றைய தினமே இறந்துவிட்டார். இதுசம்மந்தமாக என் இளைய மகன் கார்த்திக் அன்று இரவு 11.00 மணியளவில் புகார் கொடுக்க போனார். என் மகனின் பிரேதம் கடலூர் அரசுமருத்துவ மனை சவகிடங்கில் இருந்தது. போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

என் வீடு சம்பவ இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் நடந்துபோக சுமார் 20 நிமிடம் ஆகும். அடி கணக்கு தெரியாது. என் வீட்டிற்கு பக்கத்தில் கடைகள் உள்ளதா என்றால் சுமார் 10 அடி தூரத்தில் உள்ளது. சம்பவ நடந்த இடம் கடலூர் - பாலூர் ரோடு. சம்பவ இடத்திற்கு அருகே எந்த கடையும் கிடையாது என்றால் சரியல்ல. ஓட்டல் கடையும் அதற்கு பக்கத்தில் பங்க் கடையும் இருக்கிறது. அது யாருடைய கடை என்றால் பேர் தெரியாது. வழக்கு சம்பவத்திற்கு நான்கு நாட்களுக்கு முன்பு சக்திவேல் ஜெயிலுக்கு போய்விட்டார் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் சக்திவேல் ஜெயிலில்தான் இருந்தார் என்றால் சரிதான். ஞானவேலின் அக்காவை காதலித்து ஆசைவார்த்தை கூறி கற்பழித்துவிட்டதாகவும், கருச்சிதைவு செய்ததாகவும், சக்திவேல் மீது கேஸ் கொடுத்தார்கள் என்றால் சரிதான். சக்திவேலும், ஞானவேலின் அக்காவும் நான்கு வருடங்களாக காதலித்து வந்தார்கள் என்றால் சரிதான். சக்திவேலின் அம்மா பெயர் அமுதா என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் என் மகன் இறந்த மறுநாள் விசாரித்தார்கள். அப்போது காலை 6.00 மணி இருக்கும். என் வீட்டில் வைத்துதான் விசாரித்தார்கள். என்னை போலிசார் விசாரித்தபோது சக்திவேலின் அப்பாவும், அம்மாவும் சாந்தகுமாரிடம் வந்து இதுபற்றி காவல் நிலையம் சென்று விசாரிக்குமாறு சொன்னார்கள் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்தபோது பொருள்வாங்க பங்க் கடைக்கு போகும்போது சம்பவத்தை பார்த்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னை போலிசார் விசாரித்தபோது சாந்தகுமாரை ஞானவேல் என் அக்காவின் வாழ்க்கை உன்னால்தான் கெட்டது என்று கூறி ராடால் இத்தோடு ஒழிந்துபோடா என்று சொல்லி மண்டயில் அடித்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால்

இல்லை. எதிரி ஞானவேலை தவிர மற்ற எதிரிகளின் பெயர்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரித்தபோது மற்ற எதிரிகளின் பெயர்களை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஞானவேலை தவிர மற்ற எதிரிகளை ஜெயிலில் வைத்து அடையாளம் காட்டினேனா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்தபோது ஞானவேல் தவிர மற்ற எதிரிகளின் அங்க அடையாளங்கள் குறித்து ஏதேனும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்தபோது ஞானவேலை தவிர மற்ற எதிரிகளை நான் அடையாளம் காட்ட முடியும் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். ஞானவேலை தவிர மற்ற எதிரிகளை சம்பவம் நடந்த பிறகு தற்போதுதான் பார்க்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த ஒரு வருடம் கழித்து எங்கள் தெருவிற்கும் பக்கத்தில் உள்ள பள்ளிவாசல் அருகேயுள்ள கொண்டமரத்தின் அடியில் வைத்து எதிரிகள் 6 பேரையும் பார்த்தேன். அதன்பிறகாவது போலிசாரிடம் ஞானவேலை தவிர மற்ற எதிரிகளை 5 பேர்களை நான் அடையாளம் காட்டமுடியும் என்று சொன்னேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. என் மகன்கள் கோவில் வேலை செய்கிறார்கள். என் மகன்கள் இருவரும் எதற்காக சம்பவத்தன்று சம்பவ இடத்திற்கு போனார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. இன்றைய தினம் முதல் விசாரணையிலும் என் மகன்கள் எதற்காக சம்பவ இடத்திற்கு போனார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அங்கு கொட்டகை போடப்பட்ட பஸ்ஸ்டாப் எதுவும் கிடையாது என்றால் சரிதான். சம்பவ நடந்த இடத்திற்கும் பண்ருட்டி காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 2 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். பண்ருட்டி அரசு மருத்துவ மனைக்கு சென்றபோது அங்கு டாக்டர்கள் எழுதிக்கொண்டு ஒரு சீட்டில் எழுதி கடலூர் அரசு மருத்துவமனைக்கு போகச்சொன்னார்கள். கார் வைத்து

என் மகனை கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். சம்பம் நடந்த சுமார் அரைமணி நேரத்தில் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு போயிருப்போமா என்றால் ஆமாம். கடலூர் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு போனோம் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. சுமார் இரவு 8.15 மணி இருக்கும். ஸ்ட்ரெச்சரில் வைத்து என் மகனை அழைத்து சென்றோமா என்றால் ஆமாம். இரவு 9.10 அல்லது 9.20 மணியளவில் என் மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு என் மகன் கார்த்திக் புகார் கொடுக்க போனாரா என்றால் ஆமாம். சக்திவேலிடம் என் மகன் சாந்தகுமார் ஞானவேலின் அக்காவை திருமணம் செய்துகொள்ளும்படி அறிவுரை சொன்னார் என்றால் அது எனக்கு தெரியாது. சாந்தகுமார் நியாயமான காரணங்களுக்குதான் ஸ்டேஷனுக்கு வருவேன் என்று சொல்லி ஸ்டேஷனுக்கு வர மறுத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அதனால் என் மகன் சாந்தகுமாருக்கும், ஞானவேலுக்கும் எந்த முன்விரோதமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. என் மகன் சாந்தகுமார் மீது ஊரில் நிறைய பேருக்கு விரோதம் இருந்ததால், அவர்களில் யாரோ தான் என் மகனை தாக்கியுள்ளார்கள் என்றாலும், அவர்கள் தான் என் மகன் இறப்பிற்கு காரணம் என்றாலும் சரியல்ல. எனக்கோ, அ.சா.1 க்கோ வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. என் மகன் பிரேதம் கடலூர் அரசு மருத்துவமனையில் இருப்பதாக கேள்விப்பட்டு, அதன்பின்னிட்டு, சக்திவேல் குடும்பத்தினரின் தூண்டுதலின்பேரில் மண்டபம் பஸ் ஸ்டாப்பில் அ.சா.1 ம், சாந்தகுமாரும் நின்று கொண்டிருந்தபோது, எதிரிகள் வந்து என் மகனை தாக்கியதாக அ.சா.1 பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-G.Vijayakumar*
*I Additional District Judge*
*Cuddalore.*